| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>ஜெயலதா | அ.வ.எண்.370/2021 | 05.12.2023 |

<u>இ.ம.எண்.4/23 அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>

1. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது முகவரி செண்பகா நகர், ராஜாம்பாளையம் என்று உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் முகவரி பிஎஸ்ஏ நகர், மேலசீதேவிமங்களம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 புகைபடத்தின் நெகடிவ் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சிடி மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 எடுக்கப்பட்ட தேதி 04.03.1994 என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 புகைபடத்தை தவிர வேறு எந்த புகைபடமும் என் வசம் இல்லை என்றால் சரியல்ல, திருமண புகைபடம் என் வீட்டில் உள்ளது. வா.சா.ஆ.2 ரசீதில் எனது தகப்பனார் பெயர் ராமகிருஷ்ணன் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ல் உள்ள முகவரி பாலக்கரை, திருச்சி என்றால் சரிதான். வா.சா.ஆ.3 புகைபடம் எனது புகைபடத்தையும் இறந்துபோன ராஜகோபால் புகைபடத்தையும் இணைத்து போலியாக தயார் செய்யப்பட்ட புகைபடம் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.3 புகைபடத்தை வைத்து தான் மோசடியாக சிடியும் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.3 புகைபடம் 04.03.1994 ல் உண்மையாக எடுக்கப்பட்டிருந்தால் மேற்படி வா.சா.ஆ.3 புகைபடத்திற்கு நெகடிவ் மட்டுமே இருந்திருக்கும் என்றாலும் மேற்படி 1994 காலக்கட்டத்தில் கணினி மற்றும் சிடி ஆகியவை புழக்கத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. மேற்கண்ட காரணத்தினால் வா.சா.ஆ.3 புகைபடம் போலியாக தயார் செய்யப்பட்ட புகைபடம் என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.4 ல் உறவுமுறை காலத்தில் மற்ற உறவுகள் என்று தான் தனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மனைவி என்று குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான், மற்ற உறவு என்பது மனைவி தான். வாசுதேவன் செட்டியாரின் மகன் தான் இறந்துபோன ராஜகோபால் என்றால் சரிதான். அழகர்சாமி பிள்ளை மகள் தான் சாவித்திரி என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் திருமண அழைப்பிதழில் மேற்படி ராஜகோபால் மற்றும் சாவித்திரி ஆகியோருக்கு திருமணம் நடந்ததாக உள்ளது என்றால் திருமணம் எதுவும் நடைபெறவில்லை. நான் இறந்துபோன ராஜகோபால் என்பவரின் மனைவி இல்லை என்றாலும் எனக்கும் இறந்துபோன ராஜகோபாலுக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல, திருமணம் நடைபெற்றது. நான் ராஜகோபாலின் சட்டபூர்வமான வாரிசு இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஜெராக்ஸ் நகல் என்றால் அசல் தாக்கல் செய்துள்ளேன். ராஜகோபால் மற்றும் சாவித்திரி சேர்ந்து வாழ்ந்தார்களா என்றால் இல்லை. நான் பொய்யான காரணங்களை கூறி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.